REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

விரும்பினர் -- வழியும் கண்டு பிடித்தார்!

1951-ல் சென்னையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநில மாநாட்டின் ஊர்வலமும், நிகழ்ச்சிகளும் திரைப்படமாகப் பிடிக்கப்பட்டது. அந்தப் படத்தை எப்படியேனும் எல்லாமக்களும் கண்டுகளிக்க வழிசெய்ய வேண்டுமென கலைவாணர் விரும்பினர்; அதற்கு வழியும் கண்டுபிடித்தார். தனது டைரக்ஷனில் உருவான 'பணம்' என்னும் படத்தில் நமது மாநில மாநாட்டு நிகழ்ச்சிப் படங்களையும் கதையோடு கதையாகப் புகுத்திவிட்டார்; மக்கள் கண்டு மகிழ்ந்தனர்.

மாநாட்டு ஊர்வலத்தில் அண்ணு பவனிவரும் காட்சியும், மற்ற நிகழ்ச்சிகளும் அப்படத்தில் இடம்பெற்றன.

மலர் 5] சென்னை: ஆவணி 17உ திங்கள் (2—9—57) ★ ★ வெளியூர்: ஆவணி 18உ செவ்வாய் (3—9—57) [இதழ் 68

'கலைத் தாய் தன் தலை மகனை இழந்து விட்டாள்'

'புயலில் சிக்கிய கனிமரம் போல் கலைவாணர் சாய்ந்து விட்டார்'

'தமிழ் நாடே அவரது குடும்பமாகும்'

'மக்களின் நெஞ்சத்தில் நிறைந்திருந்தவர்; எல்லோர் உள்ளத்திலும் இடம் பெற்றிருந்தவர்'

'இந்த நூற்றூண்டு இவரைப் போன்ற ஒருவரைப் பெற்றதில்லை'

அண்ணு அவர்களின் துயர்மிக்க உரை

"பெரிய புயல் ஒன்று வீசி நல்ல கனி மரத்தைச் சாய்த்தது போல நம் கலைவாணர் சாய்ந்துவிட்டார். அவரது அரிய குணங்களைப் பற்றிப் பேச என் நா எழவில்லை. அவரது உயிரைக் காப்பாற்ற முடியுமானல், அவருக்காகத் தங்கள் உயிரைத் தரவும் தயாராக உள்ளவர்கள் இங்கு இருக்கிறுர்கள்.

"கலைவாணருக்கென்று தனிப்பட்ட குடும்பம் ஒன்றிருப்பதாகச் சொல்ல முடியாது; தமிழ் நாடே அவர் குடும்பம்; அவர் இந்த நாட்டுக்கு—கலையுலகிற்குச் சொந்தமானவர். இந்தத் துணைக் கண்டம் மட்டுமல்ல—பார் முழுவதிலுமே அவர் புகழ் பரவியிருந்தது. அவரை அறியாத ஆந்திரர் இல்லை; கேட்டறியாதவர் கேரளத்திலில்லை; கண்டறியாத கன்னடரில்லை.

"இந்தியாவைக் கடந்து புதுமைமிகு ரஷ்யாவுக்கு அவர் சென்று வந்தார்; அங்குள்ள மக்களின் உள்ளத்தையும் அவர் கவர்ந்தார். இன்று, உலகம் ஓர் ஒப்பற்ற கலைஞரை இழந்துவிட்டது; கலைத்தாய் தன் தலைமகனை இழந்துதவிக்கிருள்"

என்று, அண்ணு அவர்கள் ஆற்றிய இரங்கலுரையில்குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்ஞர்:—

"நாமெல்லாம், நம் வாழ்நாளிலே இதுவரை அனுபவித்திராத வேதனையை இன்று அடைந்திருக்கிறோம். யாருடைய கலையால், யாருடைய தொண்டால், யாருடைய நல்ல உள்ளத்திஞல் நாடு உயர்ந்ததோ, அவர் இன்று, நாட்டை விட்டுப் பிரிந்துவிட்டார்; அவருடைய பிரிவு நம் குடும்பத்தில் ஏற்பட்ட பிரிவு போன்றது.

"நாட்டுக்கு நல்லவராயிருந்து எல்லோர் உள்ளத்தையும் ஈர்த்தவர் நம் கலைவாணர். அவர் பிரிவால் ஏற்பட்ட நஷ்டம் தாங்கிக்கொள்ள முடியாதபடி நம்மை வாட்டிக்கொண்டிருக்கிறது. இந்த துக்கத்தை நாம் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வதன் மூலமே கொஞ்சம் தணித்துக்கொள்ள முடியுமெனக் கருதுகிறேன்.

"மறைந்த கலைவாணர் நம் நெஞ்சத்திலே நிறைந்திருந்தவர்; எல்லோர் உள்ளத்திலும் இடம் பெற்றிருந்தவர்; இறவாப்புகழ் பெற்றிருப்பவர். இந்த நூற்றூண்டு, இப்படிப்பட்ட ஒரு மனிதரைப் பெற்றதில்லை. இறந்தவர் எவரும், உலகில் எந்தத் துறையிலும் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தவர் ஒரு சிலரே யிருப்பர்.

"கலைவாணரின் உடல் நிலை பற்றிய செய்தி நாட்டு மக்களிடையே பரவி, திடுக்கிடச் செய்திருந்தது; பின்னர், 'மறைந்து போனர்' என்ற மனம் உடையும் செய்தி கேட்ட மக்கள், ஆறுதலடைய வழியில்லா நிலையில் வாடுகின்றனர்.

"நாம் அவருக்குச் செய்யும் கடைசி கைம்மாறு அவர் உடலுக்கு நெருப்பு மூட்டுவதுதான். அவர் நமக்குத் தந்தது ஆனந்தம்; நாம் அவருக்குத் தருவது கண்ணீர்; நம் வேதனையைப் போக்குவதற்கு இது தவிர வேறு வார்த்தை எதுவுமில்லை.

"ஐம்பது வயதுகூட நிரம்பாதவர் நம் கலைவாணர்; அவரது தந்தை என்று சொல்லக்கூடிய அளவு வயதுடையவர்களெல்லாம் இன்று இருக்கிருர்கள்; இவ்வளவு குறைந்த வயதில் அவர் நம்மைவிட்டுப் பிரிந்து விட்டார்."

★

கலைவாணருக்கு இறுதி வணக்கம்

சென்னை—மயிலை இடுகாட்டில், நகைச்சுவை மன்னரின் இறுதிச் சடங்குகள் நடைபெற்றபின், நடிகர் வி. நாகையா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இறுதி வணக்கக் கூட்டத்தில் கழக முன்னணி வீரர்களும், கலைஞர்களும் கலைவாணரின் கலைத்தொண்டையும், நற்பண்புகளையும் பாராட்டிப் பேசினர்; அவற்றின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது.

'சிரிக்கச் செய்து சிந்திக்கவைத்த சிந்தனைச் செல்வத்தை இழந்தோம்'

'அவரது புகழை - பெருமையைக் காப்பாற்ற அனைவரும் முன்வரவேண்டும்'

இரா. நெடுஞ்செழியன் உருக்கமான கேண்டுகோள்

"கலைத்துறை மண்டலத்தில் மாபெரும் மனிதராகத் திகழ்ந்த கலைவாணர் மறைந்தார். அண்ணு அவர்கள் குறிப்பிட்டபடி நாம் ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக்கொள்வதைத் தவிர, நம் துக்கத்தைக் குறைத்துக்கொள்ள வேறு வழியில்லை.

"கலைவாணரை நாம் இழந்தது பேரிழப்பாகும். அவர் நம்மைச் சிரிக்க வைத்து, சிந்திக்க வைததவர்; சிரிக்க வைப்பவர்கள் கலைத் துறையில் அதிகம்; ஆனல் சிந்திக்க வைப்பவர்கள் மிகக் குறைவு. இத்தகைய ஒரு மாபெரும் சிந்தனைச் செல்வரை இழந்தது ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். நம்மை நாமே ஆறுதல் படுத்திக் கொள்ளும் நிலைமையில் இருக்கின்றோம்.

"சில திங்களுக்கு முன்புதான் நாதசுரக் கலை மன்னர் இராசரத்தினத்தை இழந்தோம்; இன்று நகைச்சுவை மன்னரை இழந்து தவிக்கிறோம். இவர்களது இழப்பினை நல்லதொரு படிப்பினையாக கொண்டு, இனியேனும், அவர்களது புகழை நிலைக்கச் செய்ய எல்லாவகையிலும் முயலவேண்டும்.

"கலைவாணர் அவர்கள் நடித்த நூற்றுக்கு மேற்பட்ட படங்களையும் காப்பாற்றிவைத்திருந்து, எதிர்கால மக்களுக்கு அவற்றைக் காண்பிக்க வேண்டும்.

"கலைவாணரிடமிருந்து நாம் நுகர்ந்த கலை மணத்தை சுவைத்த நகைச்சுவையை வருங்கால மக்களும் நுகரும்படி, சுவைக்கும்படிச் செய்ய வேண்டும். அவரது புகழை, பெருமையைக் காப்பாற்ற அனைவரும் முன்வரவேண்டும்"

மு. கருணாநிதி:

'தமிழ் - தமிழர் - தமிழ்க் கலை உள்ள வரையில் கலைவாணர் புகழும் இருக்கும்'

'அவரது கலைச்சுவை - நகைச் சுவையைக் காட்டிப் பெருமையடைந்தோம்'

'இன்று அவருக்கு நம்முடைய கண்ணீரைக் காணிக்கையாக்குகிறோம்'

"கலைவாணர் தன் வாழ்நாளில் என்னென்ன தேவையென்று கருதிஞரோ அவையனைத்தும் கொஞ்சமும் குறைவுபடாமல் அவருக்குக் கிடைத்தன. அவருக்கு ஒரே ஒரு தேவைதான் பூர்த்தி செய்யப்படாமலிருந்தது; அதைத்தான் நாம் இன்று பூர்த்தி செய்கிறோம்.

"கலைவாணரின் பேரும் புகழும் தமிழரது உள்ளங்களனைத்திலும், இல்லங்களனைத்திலும் பரவியிருக்கிறது. தமிழும், தமிழரும், தமிழ்க் கலையும் இந்த உலகில் இருக்கும் வரை கலைவாணரின் புகழும் இருக்கும்.

"கலைவள்ளல்—கலாரசனையைப் பெருக்கியவர்—இன்று மறைந்தார். நாங்கள் நல்ல ஒரு துணைவரை இழந்தோம். தமிழ்க் குடும்பம் தன் மூத்த மகனை இழந்தது. இதுவரை நாம் நம்நாட்டுப் பெருமையை இறுமாப்புடன் கூறி வந்தோம், நம்மிடம் கலைவாணர் இருக்கிருர் என்பதால்!

"அவர் அளித்து வந்த கலைச்சுவையையும் நகைச் சுவையையும் காட்டி, நாம் பெருமைப்பட்டுக் கொண்டோம். இன்று அவருக்கு இறுதி மரியாதையைச் செலுத்த மயானத்திலே கூடியிருக்கிறோம். ஒப்பற்ற அந்தக் கலை மன்னருக்கு நம்

(4-ம் பக்கம் பார்க்க)

கண்ணதாசன்:

'அழியாக் காவியம் உருவாகும்'

'கலைவாணர் விருப்பத்தை நிறைவேற்றுவேன்'

"அண்மையில்தான் நாதசுரச் சக்கரவர்த்தி காலமானர்; இன்று நகைச்சுவைச் சக்கரவர்த்தியும் காலமாகிவிட்டார். இந்த இரண்டு இழப்பையும் நாம் எவ்வாறு தாங்கிக்கொள்ள முடியும்?

"கலைவாணர் அவர்களுக்கு என்னலான கைம்மாறாக அவரது வாழ்க்கை வரலாற்றை அழியாக் காவியமாக்கப் போகிறேன்; இது அவரது விருப்பமுங்கூட!

"பலமுறை பல்லோர் முன்னிலையில் தனது இந்த விருப்பத்தை அவர் என்னிடம் தெரிவித்திருக்கிருர். அந்த விருப்பத்தை நான் விரைவில் நிறைவேற்றுவேன்."

கே. ஆர். இராமசாமி:

'கலைஞர்களைத் தன்மானத்தோடு வாழச் செய்த உத்தமனை கலை உலகம் இழந்தது'

"கலைவாணரை, கலைஞர்கள் எல்லோரும் பெற்ற தாயைவிட மேலாகக் கருதிவந்தனர். பெற்றெடுத்த தாயாவது சில சமயங்களில் குழந்தைகளிடம் அன்பு காட்டத் தவறிவிடுவாள்; ஆனல் நம் கலைத் தாயான என்.எஸ்.கே. அவர்கள், மற்ற கலைஞர்களிடத்தில் அன்புசெலுத்த ஒரு நாளும் மறந்ததில்லை.

"இறந்துபோன இந்தக் கலைத் தாய்க்கு நாட்டில் பல்லாயிரக் கணக்கான பிள்ளைகள் இருக்கின்றனர். அப்பிள்ளைகளிலே, வாழ வழியற்ற பிள்ளைகளும் சிலர் இருக்கின்றனர்; அவர்களை நம் கலைத்தாய் தன் இரத்தத்தைச் சிந்தியாவது—உயிரைக் கொடுத்தாவது தன்மானத்தோடு வாழச் செய்யவேண்டுமென உறுதிபூண்டிருந்தாள். அத்தகைய தாய் இன்று இறந்துவிட்டாள்.

"கலைஞர்கள் நாட்டில் தலை நிமிர்ந்து வாழ வழி வகுத்துத் தந்த கலைத்தாயை நடிக உலகம் ஒருநாளும் மறவாது. கலைத் தாய் பெற்றெடுத்த கலைக் குழந்தைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து கலைத்தாயின் புகழ் என்றும் நிலைத்துநிற்கப் பாடுபடுவோமாக."

நம் நாடு

சென்னை 2—9—57 திங்கள்

அமைச்சரின் ஆரூடம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ள முன்னேற்ற ஏற்பாடுகளை எல்லாம் வெற்றிகரமாக நிறைவேற்றி முடிப்பதின் மூலம் எதிர்பார்க்கின்ற நல்ல பல விளைவுகளை, பொதுமக்கள் புரிந்துகொள்ளும் வகையில், பொதுமக்கள் மொழியில் பிட்டுப்பிட்டுக் கூறி, பொதுமக்கள் ஆதரவை திட்டத்திற்குப் பெற வேண்டும் என்று இந்தியப் பிரதமர் அடிக்கடி கோரிவருகின்ருர். அவை அனைத்தும், குறிப்பாகக் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கே தரப்படும் கோரிக்கையாகும் என்பதை நம்மைப் போன்றே காங்கிரசுக் கட்சியினரும் நன்கு தெரிந்தே இருக்கின்றனர்.

தாம் வெளியிடும் கோரிக்கைகளைத் தம் கட்சியினர் செய்து முடிக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர் என்ற கருத்தில்தான் இந்தியப் பிரதமர், அத்தகு கோரிக்கைகளை வெளியிட்டு வருகின்ருர். அதன்படி நடந்துகொள்ள வேண்டிய கட்டாயம் காங்கிரசு ஆட்சியினருக்கும், குறிப்பாகக்காங்கிரசு அமைச்சர்களுக்கும் உண்டு என்பதை நாம் சொல்லத் தேவையே இல்லை.

'திட்டத்தைப்பற்றி பொதுப் படையாகப் பேசும்பொழுது, திட்டத்தின் சிறு சிறு பகுதிகளை எடுத்துக்கொண்டு, அவைகளை விளக்கிச் சொல்ல முயலல் வேண்டும்; அவைகளை, பிற நாடுகளில் நிகழும் நடைமுறைகளுடன் ஒப்பிட்டு விளக்கமுரைக்க வேண்டும்.' இவ்வாறு இந்தியப்பிரதமர், நாட்டுமக்களிடம் திட்டத்தை விளக்கிப்பேச வேண்டும் என்று காங்கிரசு அமைச்சர்களை வேண்டிக் கொள்ளுகின்ருர். ஆனல், அமைச்சர்களோ, திட்டத்தைக் குறித்துப் பொதுமக்களிடம் பேசுவதைத் தவிர, தங்களுக்கு மட்டுமே விருப்பமான, தங்கள் இதயத்துக்கு மட்டுமே அமைதியும் நிறைவும் தரக்கூடிய, பொருளற்ற கருத்துக்களை எல்லாம் சண்டப்பிரசண்டம செய்து வருகின்றனர்.

இப்படி இந்தியப் பிரதமரின் விருப்பத்தை நிறைவேற்ற முடியாத நிலையில் காங்கிரசு அமைச்சர்கள் இருப்பதற்கு, அதிமுக்கியமான மூன்றே காரணங்கள் தான் இருக்க வேண்டும் என்று நாம் யூகிக்கின்ருேம். திட்டத்தைக் குறித்துத் தாங்களே விளக்கமாகத் தெரிந்து கொள்ளாமல் இருப்பதும் தெரிந்துகொண்டிருந்தாலும் அதைச் சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும்வகையில் தங்களுக்குப் பேசத் தெரியாமல் இருப்பதும் முதல் காரணமாக இருக்கவேண்டும். திட்டத்திலுள்ள முன்னேற்ற ஏற்பாடுகள் அனைத்தும் வடநாட்டிற்கே வளமூட்டுவதாக இருப்பதால் அவைகளைத் தமிழ்நாட்டு மக்களிடம் கூறுவதின் மூலம், திட்டத்திற்கு ஆதரவு கிடைக்காததுடன் ஏற்கனவே உள்ள எதிர்ப்பும் கூடுதலாகக்கூடும் எனக்கருதி, அதுபற்றி பேசாதிருப்பதே சிறந்தது என அமைச்சர்கள் முடிவுகட்டிக் கொண்டிருப்பது, இரண்டாவது காரணமாக இருக்கவேண்டும். வேகமாக வளர்ந்துவரும் முன்னேற்றக் கழகத்தின் தீவிர வளர்ச்சியின் காரணமாக எதிர்காலத்தில், தாங்கள் இன்று சுவைத்து வரும் பதவிக்கு ஆபத்து வரக்கூடுமே எனத் தங்களுக்குள்ள ஏக்கமே, திட்டத்தைக் குறித்து அமைச்சர்கள் வாய்திறக்காமல் இருப்பதற்கான மூன்ருவது காரணமாக இருக்க வேண்டும்.

காரணம் எதுவாக இருந்தாலும், நமது நிதி அமைச்சர் நமது முன்னேற்றக் கழகம் அந்தப் பொதுத் தேர்தலில் பெற இருக்கும் விளைவு குறித்து சில நாட்களாக ஆரூடம் கூறிக்கொண்டு வருகின்ருர். தனது பதவிக்கு ஆபத்துவராமல் இருக்க வேண்டுமானல் அடுத்த பொதுத் தேர்தலில் முன்னேற்றக் கழகம் பெருந்தோல்வி அடைந்தாக வேண்டும் என்பது அவருடைய பேரவா. அதேநினைப்பு அவருடைய புண்பட்ட நெஞ்சை மேலும் மேலும் துளைத்துக் கொண்டு இருக்கின்றது. எனவே அவர், திராவிட முன்னேற்றக் கழகம் அடுத்தத் தேர்தலில் சரிந்துவிடும் என ஆரூடம் கூறுவதின் மூலம், தனது புண்படும் நெஞ்சுக்குத் தேறுதல் கூறிக்கொள்ள முயற்சிக்கின்ருர். அவர் அவாவும் தீர்ந்து போகட்டும்.

நிதி அமைச்சர் போன்றவர்கள் முன்னேற்றக் கழகத்தின் மீது சுடச்சுட வீசும் காரசாரமான வசைமொழிகளைக் கேட்கவே பொதுமக்கள் கூடுவதில்லை; ஏதோ அமைச்சர் பேசுகின்ருரே என வேடிக்கை காணக் கூடும் சிலரும்கூட, கழகத்தை ஏச அமைச்சர் வாய் திறந்ததும், கைதட்டி கேலி செய்கின்றனர். அமைச்சரும் வாய்மூடி, இமைமூடி திறக்குமுன், திறந்த கடையை மூடிக் கொண்டு, ஊரைவிட்டுச் சென்று விடுகிருர்!

தமக்கு சேருவதுபோன்றே, நிதி அமைச்சர் போன்றவர்கள் பேசுகின்ற— இல்லை--ஏசுகின்ற கூட்டத்திற்கும் பொதுமக்கள் பல்லாயிரக்கணக்கில் கூடுவதாகக் கருதிக் கொண்டுதான், பொதுமக்களுக்கு திட்டத்தைக் குறித்து விளக்கமுரைக்கவேண்டும் என்று இந்தியப் பிரதமர் வேண்டிக்கொள்கிருர் போலும்! பாதுகாப்புப் படையினரையே பொதுமக்களாகக் கருதிக்கொண்டுதான் நமது நிதி அமைச்சர் போன்றவர்கள் பொதுக்கூட்டம் நடத்திவருகிருர்கள் என்ற மகத்தான உண்மையை இந்தியப் பிரதமர் தெரிந்துகொள்வாரானல், திட்டத்தைக் குறித்துப் பேசுங்கள் என்று இந்த அமைச்சர்களை வேண்டிக்கொள்ள முன்வரவே மாட்டார்!

'கொடிக்காக உயிர்விட்ட குமரன் தமிழனகப் பிறந்தது தவரு?'

'கப்பலோட்டிய தீரரை 'சுதந்திர யாத்திரை'யில் காணேமே?'

'சுதந்திரத்திற்காகப் போராடிய தென்னவர் எவரும் இல்லையே!'

'தமிழ்நாட்டிற்கு அவமானம்-தென்னகத்திற்கு அநீதி'

'பதில் சொல்லியாக வேண்டும் --- படம் உடனே வாபசாக வேண்டும்'

நெஞ்சு பொறுக்காத 'விகடன்' எரிமலையாகிருர்!

"தென்னுட்டவர்களின் சேவை மற்றவர்களைவிடக் குறைந்துவிட்டதா? மதிக்கத்தக்க அளவு தென்னுடு தியாகம் செய்யவில்லையா? கொடிக்காக உயிர்விட்ட குமரன் தமிழனகப் பிறந்தது தவரு? அல்லது செய்திப்பட இலாகாவின் தலைவருக்குத்தான் தேசத்தின் சரித்திரம் தெரியாதா? இல்லையேல், 'சுதந்திர யாத்திரை' என்ற படத்தை வெளியிட அனுமதித்த கமிட்டி மெம்பர்கள் அத்தனைபேரும் ஒருதலைப் பட்சமான மனப்பான்மை உடையவர்களா?

"இது வேண்டுமென்றே செய்யப்பட்ட அவமானம் என்று 'விகடன்' கருதவில்லை. காரணம் எதுவாக இருந்தாலும், தவறு தவறுதான். இந்த மாபெரும் தவறுக்கு அரசாங்கம் தென்னுட்டவருக்குப் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்; படத்தை உடனே வாபசு பெற வேண்டும்.

"மானம் பெரிதாக மதிக்கும் தமிழ்நாட்டின் பிரதிநிதிகள் பலர் டில்லியில் இருக்கிருர்கள். தேர்தலின்போது தமிழ்நாட்டு மக்கள் சிரித்த முகத்துடன் ஒட்டளித்த காட்சியை அவர்கள் இதற்குள் மறந்திருக்க முடியாது. இன்று அவர்கள் இங்கு வந்து பார்ப்பார்களானல் ஒவ்வொரு தமிழனின் உள்ளத்திலும் பொங்கும் உணர்ச்சியைத் தெரிந்துகொள்வார்கள். தென்னிந்தியாவுக்கு இழைக்கப்பட்டுள்ள இந்தப் பெருந்தவறை நீக்க அவர்கள் முன்வருவார்கள்—பழியைத் துடைப்பார்கள் என்று ஒவ்வொரு தென்னிந்தியனும் எதிர்பார்க்கிருன்"

—இவ்வாறு, 'நெஞ்சு பொறுக்குதில்லையே' என்ற தலைப்பில், 1—9—57-ந் தேதியிட்ட 'ஆனந்த விகடன்', தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுவிட்டு, இந்திய சர்க்கார் செய்திப்பட இலாகா தயாரித்த 'சுதந்திர யாத்திரை' என்ற படத்தைப் பார்த்து தனது நெஞ்சம் கொதித்திருந்த நேரத்தில், 'இந்திய சர்க்கார், மகாராஷ்டிரத்திற்குத் தெற்கே மனிதர்களே இல்லை என்று எண்ணிவிட்டார்களா?' என்று கேட்ட பொதுமக்களின் குரலையும் சுட்டிக் காட்டி, மேலும் கூறுவதாவது :—

"1857-ம் வருடம் சிப்பாய்க் கலகத்தில் ஆரம்பித்த சுதந்திரப் போரின் நூற்ருண்டுவிழாவைக் கொண்டாடும் தருணத்தில் நமது செய்திப்பட இலாகா 'சுதந்திர யாத்திரை' என்று ஒரு அருமையான படத்தை வெளியிட்டார்கள்; அதைத் தென்னுட்டு மக்கள் பலர் ஆவலுடன் பார்த்தார்கள்; ஆனல், கடைசியில் ஏமாற்றத்துடன் திரும்பினர்கள்.

"'சுதந்திரப் போராட்டத்தில் முதல் முழக்கம்செய்த வீரத் தமிழன் கட்டபொம்மனுக்கு அரசாங்கம் விழா எடுக்கவில்லை; அவனுக்குத் தக்க ஞாபகச் சின்னம் அமைக்கவில்லை; அவன் திருவுருவத்தைக்கூட தபால் தலையில் திட்டவில்லை' என்ற குறை, தமிழ்நாட்டில் நெடுநாளாக இருந்து வருகிறது.

"'அவர் இருநூறு வருடங்களுக்குமுன் இருந்த வீரன்; நாங்கள் இந்த நூறு வருடத்துக்குள் வாழ்ந்த வீரர்களைத்தான் கௌரவிப்போம்' என்று சொன்னர்கள். ஆனல், இந்த நூற்ருண்டைச் சேர்ந்த தென்னுட்டுத் தேசீய திலகங்களையும் இந்தப் படத்தில் சேர்க்க மறந்துவிட்டார்கள். இதை நினைத்தால் நமது நெஞ்சு பொறுக்கவில்லை.

"1883-ம் வருடத்தில் இந்திய மக்களைத் தட்டி எழுப்பி காங்கிரசை ஆரம்பிக்கச்செய்த ஆங்கிலேயர் ஹ்யூம்துரை அதில் இருக்கிருர்; ஆனல், முதல் காங்கிரசின் முதல் தீர்மானத்தைக் கொண்டு வந்த தமிழ்மகன் ஜி. சுப்பிரமணிய அய்யர் அதில் இல்லை.

"சுதந்திரப் போரின் படத்தில் மகான் விவேகானந்தர் இருக்கிருர்; ஆனல், அவரை அமெரிக்காவுக்கு அனுப்பிய வீரத் தமிழர்கள் யாருமே அந்தப் படத்தில் இடம் பெறவில்லை.

"பிறகு ராஜாராம் மோஹன் ராய், சி. ஆர். தாஸ், அஜ்மல் கான், டாக்டர் அன்சாரி முதலியவர்களின் படங்கள் எல்லாம் காட்டப்பட்டன. தேசத் தலைவர்களின் திருவுருவங்களைப் பார்க்கும்போதெல்லாம் 'விகடன்' வணக்கம் செலுத்தினன். சைமன் கமிஷன் மறியலில் சார்ஜன்ட் ஒருவன் கையால் தடியடிபட்டு மாண்ட லாலா லஜபதிராய்க்கு அஞ்சலி செய்துவிட்டு, கையைக் குவித்த வண்ணம் 'விகடன்' காத்திருந்தான்.

"செக்கிழுத்த சிதம்பரனுர் வருவார்; தேசத்துப் போருக்கு திருவிளக்கேற்றிய தீரர் வருவார்; கப்பலோட்டிய தமிழனின் திரு உருவம் திரையில் காட்டப்படும்—கரம் குவிப்போம்' எனக் காத்திருந்தான்; ஆனல் அருமைச் சிதம்பரனர் படம் அதில் இல்லை; தமிழர் சிந்தையில் உள்ள சிதம்பரனரை 'சுதந்திரயாத்திரை'யில் சேர்க்கவில்லை என்பதைக் கண்டதும், கரங்குவிக்க எடுத்த கைகளால் கண்ணைத் துடைத்துக் கோண்டான்.

"என் இந்த வேற்றுமை? என் இந்தத் தவறுதல்?' என்று எண்ணும்போதே லோகமான்ய பால கங்காதர திலகர் வந்தார்; பிரோஸிஷா மேத்தா வந்தார்; தாதாபாய் நவரோஜி வந்தார். அவர்களுக்கு அஞ்சலி செலுத்தினன்; ஆனல், சிவாவும், பாரதியும் அங்கு வரவில்லை.

"இன்றைய சகாப்தத்தின் மாபெரும் கவிஞன் — தேசீயப் போருக்காக அஞ்ஞாதவாசம் செய்து அறநெறி வளர்த்த அமரகவிஞன் 'அச்சமில்லை அச்சமில்லை' என்று யாருடைய பாடலைப் பாடிப் பாடி நாம் சுதந்திரப் போர்புரிந்தோமோ, 'விடுதலை விடுதலை' என்று எந்தக் கவியினுடைய வாக்கை முழங்கி விடுதலை பெற்ருேமோ, அந்த மகாகவி பாரதிக்கு அந்தப் படத்தில் இடமில்லை என்பது தமிழ்நாட்டுக்கு அவமானம்—தென்னகத்திற்கு அநீதி—பாரதத்துக்கே ஒரு இழுக்கு என்று மனம் குமுறியது.

"'சரி, வேண்டியவர்களை இரண்டாம் பந்தியில் வைப்பது போல் பிற்பகுதியிலாவது நம் தலைவர்கள் வரலாம்' என்று 'விகடன்' காத்திருந்தான்.

"அடுத்த பகுதியும் வந்தது. மாபெரும் தலைவர்கள் படமெல்லாம் வந்தன. அண்ணல் காந்தி வந்தார்—மனிதகுல மாணிக்கம் நேருவைக் கண்டோம்—மன்னர்களை ஜெயித்த வல்லபாயைப் பார்த்தோம்—அறிஞர்கள் போற்றும் ஆசாதைக் கண்டோம்—ஜனுதிபதி இராசேந்திரப் பிரசாதைப் பார்த்தோம்—'ஜெய் ஹிந்த்' முழக்கிய நேதாஜியையும் கண்டு மெய்சிலிர்த்தோம்; ஆனல் ...ஆனல்...எழுதவே கை நடுங்குகின்றது! எண்ணினல் இரத்தம் கொதிக்கின்றது!

"ஒத்துழையாமை இயக்கத்தை உருவாக்கிய உத்தமரை —உப்பு சத்தியாக்கிரகத்துக்கு நம் தமிழ்நாட்டில் தலைமை தாங்கி நடத்திய சத்தியசீலரை—காங்கிரசின் அறிவுக் கருவூலத்தை—காந்திஜியின் வலக்கரத்தை—வெள்ளையன் வழிவழியாக வகித்துவந்த கவர்னர் - ஜெனரல் பதவியை சுதந்திர இந்தியாவில் ஏற்றுக் கொண்ட முதல் கவர்னர்-ஜெனரலை—உலகம் போற்றும் நமது அருமை ராஜாஜியை அந்தப் படத்தில் காணேம்.

"பாராளுமன்றத்திலும் சரி, பட்டிதொட்டிகளிலும் சரி, சுதந்திரப் போரின் சங்கநாதத்தை நாடெங்கும் முழக்கிய தீரர் சத்தியமூர்த்தியை அதில் காணேம்!

"தம் சொத்து, சுதந்திரம் எல்லாவற்றையும் தேசத்துக்காக இழந்து எண்பது வருடம் நாட்டுக்குப் பாடுபட்டு உழைத்த ஆந்திரகேசரி பிரகாசம்காருவை அதில் காணேம்!

"ஆம்; அந்தப் படத்திலே தேசீய சுதந்திரத்துக்காகப் போராடிய தென்னிந்தியர்கள் யாருமே இல்லை."

நிலையும் நினைப்பும்!

புதுடில்லி, ஆக. 31—

இனி காங்கிரஸ் பேரவைக் கூட்டம் ஆடம்பரமின்றி நடத்தப்படுமாம்; திறந்தவெளிக் கொட்டகைக்கு மாருக அடைப்புப் பந்தலில் நடத்தப்படுமாம்.

அடுத்த காங்கிரஸ் பேரவை கஹாட்டியில் சனவரி திங்களில் நடைபெறுமாம்.

இரண்டாவது திட்டமும், பொதுவுடைமைக் கட்சியினரும்:

‘சொல்லளவில் ஆதரவு’ செயலளவில் அழிவுவேலை’

‘சாத்தியமான இடங்களில் எல்லாம் தொல்லை விளைவித்துவருகின்றனர்’

நிதி அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார் ‘நற்சான்று’

நாட்டின் பொருளாதாரத்தை மட்டுமின்றி, அரசியல் சட்டத்தையே கவிழ்க்க இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி முயற்சி செய்வதாக மத்திய நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி மக்கள் சபையில் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார்.

கம்யூனிஸ்டு உறுப்பினர் ஒருவர் தம்மைத் தாக்கிப் பேசியதற்கு நிதி மந்திரி பதிலளிக்கையில், ‘ஐந்தாண்டுத் திட்டத்தை அமுல் நடத்த ஒத்துழைப்பதாக வாயளவில் கம்யூனிஸ்டுகள் கூறி வந்துள்ளபோதிலும், அவர்களது செய்கைகள் சொல்லைப் பொய்ப்பிப்பனவாக இருக்கின்றன’ என்று சுட்டிக்காட்டினார்.

“கம்யூனிஸ்டுக் கட்சி செய்யும் ஒவ்வொன்றும், அவர்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும், பேசும் ஒவ்வொரு கூட்டமும் இந்நாட்டின் பொருளாதாரத்தை மட்டுமின்றி, அரசியல் சட்டத்தையும் கவிழ்ப்பதற்காகச் செய்யப்படும் முயற்சியே” என்றார், நிதி அமைச்சர்.

ஆவேசத்துடன் நிதி மந்திரி மேலும் கூறியதாவது:—

“அது புத்திசாலித்தனமான காரியம் என்று கம்யூனிஸ்டுகள் நினைத்தால் அது சிறுபிள்ளைத்தனம்தான். தம் உள்நோக்கங்களை மறைக்கும் முயற்சி என நினைத்தால் அது வீண்தான். திட்டத்துக்கு ஏற்படும் ஆபத்துக்கள் அனைத்தும் கம்யூனிஸ்டுகளிடமிருந்து வருவதே.

“கம்யூனிஸ்டுகள் செய்துவரும் பிரசாரத்தால்திட்டத்தை அமுல் செய்வது கஷ்டமாயிருக்கிறது; ஏனெனில், சாத்தியமான இடத்தில் எல்லாம் அவர்கள் தொல்லை விளைவித்து வருகின்றனர்.

“சீனாவிலும், மற்ற சர்வாதிகார நாடுகளிலும் ஐந்தாண்டுத் திட்டங்களின் அமுல் பற்றிச் சொல்லப்பட்ட விஷயங்களுக்கு டி. டி. கே. பதிலளிக்கையில், ஜனநாயக ஆட்சி முறை மட்டுமின்றி, சமஷ்டி அரசியல் அமைப்பும் பெற்றுள்ள ஒரு நாட்டில் திட்டமிடுவதற்கும், சர்வாதிகார நாட்டில் திட்டமிடுவதற்குமிடையே உள்ள வித்தியாசத்தைக் கவனிக்குமாறு கூறினார். ‘சர்வாதிகார ஆட்சியில் திட்டம் தோல்வியடைந்தாலும் கேள்வி கேட்கும் துணிச்சல் யாருக்கும் இருக்காது’ என்று அவர் கூறியபோது, சபையினர் கரகோஷம் செய்தனர்.

கவனக் குறைவால் நேரிட்ட விளைவு?

மூன்று பொறியியல் நிபுணர்கள் தற்காலிகமாக விலக்கப்பட்டனர்

புதுடில்லி, ஆக. 29—

இந்திய அரசாங்கத்திற்கென புதுடில்லியிலுள்ள வினய் நகரில் 1954-ம் ஆண்டில், மத்திய மராமத்து இலாகாவினுல் புதுக் கட்டிடங்கள் நிர்மாணிக்கும் வேலை ஆரம்பமாகியதாம்; இவ்வேலை 1956-க்குள் கட்டப்பட்டுவிட்டதாம்; ஆனால், இதற்குள் அக்கட்டிடங்களின் சுவர்களில் வெடிப்பு; முதல் மாடியின் தளத்தில் காங்கிரீட் சரியின்மை; சாக்கடைக் குழாய்களில் கசிவு—இத்தனையும் ஏற்பட்டுள்ளதாம்.

இதற்குக் காரணம், கட்டிட நிர்மாணத்தில் ஈடுபட்டிருந்த பொறியியல் நிபுணர்களின் கவனக் குறைவுதான் என்ற நிலையில் மூன்று பொறியியல் அதிகாரிகளை வேலையினின்றும் தற்காலிகமாக விலக்கி வைத்து, இலாகா பூர்வமான விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக மக்கள் சபையில் அமைச்சர் சந்தா தெரிவித்துள்ளார்.

வெட்கம்! தோல்விதான் என்கிறார்கள்!

புதுடில்லி, ஆக. 30—

‘உணவு தானியங்கள் மீது கொடுக்கப்படும் கடன் தொகை, அனுமதிக்கப்பட்ட தொகையை விட 24.4 சதவிகிதமாம்!

நெல்மீது மட்டும், தரப்பட்டதைவிட 42 சதவிகிதம் அதிகமாம்.

உணவுப் பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த ரிசர்வ் பாங்கி, மற்ற பாங்கிகளுக்கு அனுப்பிய தாக்கீது எதிர்பார்த்த பயனைத் தரவில்லையாம்.

தற்போது உணவுப் பொருள்களின் விலை உயர்வுக்கு பாங்கிகளே காரணமாம். மேலும் பாங்கிகள், ரிசர்வ் பாங்கியின் உத்திரவை அமுல் நடத்தாவிட்டால் தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அமைச்சர் ஜெயின் இப்போது மறுபடியும் எச்சரித்துள்ளார்.

வாக்குறுதியை நிறைவேற்ற பணம் தருகிறார்களாம்!

டில்லி, ஆக. 27—

சோஷலிச சமுதாயத்தை உருவாக்குவதாகவும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் போதிய பணம் இல்லை என்றும் புதுவரிகள் போடும் இந்திய அரசாங்கம், முன்னாள் மன்னர்களுக்குத் தரப்படும் கோடிக்கணக்கான தொகைபற்றி பல காரணங்களைக் கற்பித்து நியாயம் கூறியுள்ளது.

முன்னாள் மன்னர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் காரணமாக, இந்திய அரசாங்கத்திற்கு ஏற்படும நஷ்டம் சில கோடிகள் தானும்; அது பெரிதல்லவாம்; அதனால் இந்தியா பாதிக்கப்படாதாம்!

மேலும், முன்பு அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவே பணம் தரப்படுகிறதாம்!

பண்டித நேரு, பாராளுமன்றக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களிடம் இவ்வாறு கூறியுள்ளார்.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி

சென்னை, ஆக. 31—

ஆகஸ்டு 17-ந் தேதியுடன் முடிந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் வாழ்க்கைச் செலவு ஒரு புள்ளி குறைந்து 373-ல் நின்றது. காய்கறி, இறைச்சி ஆகியவைகளில் விலை சிறிது இறங்கியதே இதற்குக் காரணம்.

ஆந்திரத்தில் வைர வயல்கள்?

புதுடில்லி, ஆக. 31—

ஆந்திர மாநிலத்தில் வைரங்கள் பற்றி ஆராய்ந்து அறிவிக்கும் நற்பணியில் நிலவள ‘துப்புறவு’ நடத்த இந்திய அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளாம்.

செல்வ வரி வசூல்

நிதி அமைச்சர் தகவல்

புதுடில்லி, ஆக. 29—

“நடப்பு நிதி ஆண்டில் செல்வ வரி இனத்தில் இந்திய அரசாங்கத்திற்கு ரூ. 15 கோடி வசூலாகும் என்று மதிப்பிடப்பட்டிருந்தது; ஆனால், செலக்ட் குழு அளித்துள்ள சலுகைகளைக் கணக்கிட்டு மதிப்பிடும்போது ரூ. 12½ கோடி மட்டுமே வசூலாகும் என்று தெரியவருகிறது” என்று இந்திய நிதி அமைச்சர் டி.டி.கே. மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

20 இலட்சம் டன் உணவுத் தானியம்

வடநாட்டு கிடங்குகளில் சேமிப்பு செய்யப்படுமாம்

புதுடில்லி, ஆக. 31—

உணவு நெருக்கடியை சமாளிக்க மத்திய அரசாங்கம் 20-இலட்சம் டன் உணவுத் தானியங்களை பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களில் உள்ள அரசாங்கக் கிடங்குகளில் சேமித்து வைக்க முடிவு செய்திருக்கிறது என்று மத்திய உதவி உணவு அமைச்சர் கிருட்டினப்பா தெரிவித்துள்ளார்.

கலைவாணர் வாழ்க்கைக் குறிப்புகள்

1908-ம் ஆண்டு, நவம்பர் மாதம், 15-ந் தேதி—ஆம்! இந்த நாளில் தான் நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருட்டினன் பிறந்தார்.

தென்னகத்தில் உள்ள நாகர்கோவிலை யொட்டியுள்ள ஒழுகினசேரி என்னும் சிற்றூரில் சுடலைமுத்து—இசக்கியம்மாள் தம்பதிகளுக்கு அருமைப் பிள்ளையாகப் பிறந்தார். சீமான் வீட்டில் பிறந்து, செல்வத்திலே புறண்டு, கவலை இன்னதென்று அறியாத வாழ்க்கை அவருக்கு அமையவில்லை. மிகவும் எளிய குடும்பத்திலே பிறந்து, வறுமை வாழ்வுடன் போராடவேண்டிய நிலை அவருக்கு அந்தச் சிறுவயதிலேயே இருந்தது. அவருடைய பள்ளிப் படிப்பு அவரின் விருப்பப்படி அமையவில்லை. தன் தாய்மொழியான தமிழில் கல்வி கற்க வசதியில்லாத அவல நிலையின் காரணமாக மலையாளம் கற்க நேரிட்டது. அவரது பள்ளிப் படிப்பும் 4-ஆம் வகுப்புடன் முடிந்தது.

குடும்பத்தின் பொருளாதார நிலை மிகவும் மோசமடைந்தது சிறு வயதிலேயே பல வேலைகள் செய்து, பெற்றோர்களின் சுமையைக் குறைக்கவேண்டியிருந்தது. அவர் வாழ்க்கைப் போராட்டம், இறுதியில் தனக்கே இயல்பாக அமைந்துள்ள நகைச்சுவையை, நடிப்பின்மூலம் பொலிவுறச் செய்து, கலைத் தொண்டாற்ற வேண்டிய கட்டத்தில் கொண்டு சேர்த்தது.

கோல்டன் நாடகக் கம்பெனியில் சில்லறை நகைச்சுவைப் பாத்திரங்களை ஏற்று, காண்போர் மனதைக் கவர்ந்தார். தொடர்ந்து டி. கே. எஸ். நாடகக் குழுவில் சேர்ந்து, நகைச்சுவை நடிப்புக்கு மக்களிடையே மதிப்பும், நற்பெயரும் பெறுமளவிற்கு தொண்டாற்றினார். அவருடைய நகைச்சுவை நாடகங்கள் மக்கள் பார்க்கும்போது ரசித்துவிட்டு, பிறகு மறந்துவிடக் கூடிய பொழுதுபோக்காக அமையவில்லை. மக்களை சிந்திக்கச் செய்தது வாழ்க்கைக்குத் தேவையான ஓர் சீர்திருத்தப் பாதையாக அமைந்திருந்தது. இதுவே அந்தக் காலத்திலும் மக்கள் அவருடைய நடிப்பையும், நகைச்சுவையையும் விரும்பியதற்கு அடிப்படைக் காரணம்.

அடுத்து அவருக்கு திரைப் படத்தில் புகும் வாய்ப்பு ஏற்பட்டு முதன் முதல் நடித்த படம் ‘சதி லீலாவதி’; ஆனால் முதலில் வெளியான படம் ‘மேனகா’.

அந்தப் படம் மக்கள் மன்றத்தில் நல்ல ஆதரவையும், பாராட்டையும் பெற்றது. கலைவாணருக்குத் திரையுலகில் நிலையான இடம் கிடைத்தது. தொடர்ந்து அவர் 100 படங்களுக்கு அதிகமாக நடித்து, தனது நகைச்சுவை மூலம் கலைத் தொண்டாற்றியுள்ளார். இவருடைய நகைச்சுவை நடிப்பு இல்லாத படங்களை மக்கள் விரும்பமாட்டார்கள் என்று பட முதலாளிகள் எண்ணிய காலமும், கலைவாணரின் நகைச்சுவைக்காகத்தான் படம் ஓடுகிறது என்று ரசிகளும், விமர்சனம் செய்வோரும் கூறிய காலமும் தமிழ்ப் பட உலகில் இருந்துள்ளது.

கலையுலகில் கூட்டாளிகளான என். எஸ். கே.-யும், டி. ஏ. மதுரமும் வாழ்க்கையிலும் ஒருமனப்பட்டுத் திருமணம் புரிந்து கொண்டனர்.

கலைவாணர், ‘பைத்தியக்காரன்’ என்ற படத்தைச் சொந்தமாகத் தயாரித்து அதன் மூலம் நல்ல கருத்துக்களைப் பரப்பினார். அண்ணா எழுதிய ‘நல்ல தம்பி’ என்னும் கதையைப் படமாக்கி மதுவிலக்கு பிரச்சாரத்தை படத்துறையில் செய்து காட்டியுள்ளார். தொடர்ந்து ‘மணமகள்’ ‘பணம்’ என்ற இரண்டு படங்களைத் தயாரித்து வெற்றி கண்டார். அவருடைய பாட்டும், பேச்சும், திரட்டினால் ஓர் நீதிக் களஞ்சியமாக கலை உலகில் திகழும்.

★

சிறந்த பேச்சாளர்!

கலைவாணர், மேடைப் பேச்சிலும் வல்லுநர். எப்படிப்பட்ட விஷயத்தையும் நகைச்சுவையுடன் கலந்து, எல்லோர் மனதிலும் பதியுமாறு, சலிப்புத்தட்டாத வகையில் நீண்ட நேரம் சொற்பொழிவாற்றும் ஆற்றலையும் அவர் பெற்றிருந்தார்.

ரஷ்யாவுக்குச் சென்று திரும்பியதும், அவர் பல இடங்களில் ‘நான் கண்ட ரஷ்யா’ என்ற தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவுகள் புத்தக உருவிலும் வெளிவந்திருக்கின்றன. அப்பொழுது, சென்னைக் கடற்கரையில் சுமார் 2½ மணி நேரம் பேசிய பேச்சு, அங்கு கூடியிருந்து கேட்ட 2 இலட்சம் மக்களின் உள்ளங்களில் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

வடாற்காடு மாவட்ட

தி. மு. க. 3-வது மாநாடு

செப்டம்பர் 21, 22-ந் தேதிகளில்

திருவண்ணாமலையில்

சாமி அரங்கில் நடைபெறும்

★

21—9—’57:

இந்திப் பொது மொழி எதிர்ப்பு மாநாடு

தலைவர்:

1938-ம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில்

சர்வாதிகாரியாகப் பணியாற்றிய

சுவாமி அருணகிரிநாதர்

திறப்பாளர்:

சி. வி. எம். அண்ணாமலை

★

22—9—’57:

கழகப் பொது மாநாடு

தலைவர்:

அன்பில்-தருமலிங்கம்

திறப்பாளர்:

கிருஷ்ணமூர்த்தி பி.ஏ. (ஹானர்ஸ்)

★

அண்ணா, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன்,

மற்றும் இயக்க முன்னணி வீரர்கள்

அனைவரும் கலந்துகொள்வர்.

இரண்டு நாட்களிலும் நாடகங்கள் உண்டு

கட்டணம்: ரூ. 5, 3, 1.

ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ.
மா. பா. சாரதி எம்.எல்.ஏ.
செயலாளர்கள்

முல்லை - சத்தி
வரவேற்புக்குழு தலைவர்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நாட்டிற்கு சேவைசெய்த 'நாகரீகக் கோமாளி' வெந்து நீருனர்

அறிவுக் கருத்தைப் பரப்பியவர்கள் பாதையில் சென்று அழியாப் புகழெய்தி விட்டார்

மக்கள் மறக்க முடியாத 'நல்லதம்பி' என்ற திரைப் படத்தில், ஒரு கட்டத்தில் நகைச்சுவை மன்னர் பாடியதுபோன்று, நாட்டிற்குச் சேவை செய்யும் 'நாகரீகக் கோமாளி'யாகவே வாழ்நாளெல்லாம் கலை உலகு மூலம் நாட்டிற்குப் பணியாற்றிய என். எஸ். கே. அவர்கள், உலகில் அறிவுக் கருத்தைப் பரப்பியவர்களின் பாதையிலேயே சென்று மறைந்துவிட்டார்; சென்னை நகரம் இதுவரையில் கண்டும் கேட்டுமிராத ஓர் சவ ஊர்வலத்தை அன்று கண்டது; 12 மைல் நீளமுள்ள பாதையில் நின்று மக்கள் கலை உலகத் தலைமகனுக்கு இறுதி வணக்கம் செலுத்தினர்.

கலைவாணரின் உடலுக்கு அவரது மூத்த மகன் ராஜா தீமூட்டினார். கலைவாணரின் உடலை தீ பற்றிக்கொண்ட கொடுமையான அந்தக் காட்சியைக் கண்டதும் கூட்டத்திலிருந்த மக்கள் 'ஓ'வென்று அலறிவிட்டனர். எங்கும் அழுதரல்; எல்லோர் கண்களிலும் நீர் பெருக்கெடுத்து ஓடியது; இத்துடன் கலைவாணரின் உடலும், அவரது இரக்க உள்ளமும், நகைச்சுவையும் வெந்து நீருயிற்று.

சென்னை, செப். 1—

அண்ணா அவர்கள் கலைவாணரின் உடல்மீது, மலர் வட்டம் சூட்டி, கழகச் சார்பில் தன் இறுதி மரியாதையைத் தெரிவித்துக்கொண்டார்.

தொடர்ந்து பொதுச்செயலாளர், துணைப் பொதுச்செயலாளர், கருணாநிதி, சிற்றரசு, சத்தியவாணி-முத்து மலர்களைத் தூவி, தங்கள் மரியாதையைச் செலுத்தினர்.

மறைந்த கலைவாணரின் உடல் நேற்று 12 மணிக்கு மயிலை இடுகாட்டில் எரியூட்டப்பட்டது.

இதுவரை சென்னை மாநகரே கண்டிராத அளவுக்கு பல இலட்சம் மக்கள் கலங்கிக் கண்ணீர் விட்டு கலைமன்னருக்கு இறுதி மரியாதை செலுத்திய நிகழ்ச்சி நெஞ்சுருக்குவதாக இருந்தது.

நேற்று காலை 7 மணிக்கு, தியாகராயநகரிலிருந்து புறப்பட்ட சவ ஊர்வலம் 12 மணிக்கு மயிலை இடுகாட்டையடைந்தது.

பூக்களால் அலங்கரிக்கப்பட்ட மோட்டார் வண்டியொன்றின் மீது பட்டு மெத்தையிலே கலைவாணரின் உடல் வைக்கப்பட்டு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது.

ஊர்வலத்தில் சுமார் 5 இலட்சம் மக்கள் கலந்துகொண்டனர்.

தியாகராயநகரிலிருந்து மயிலை இடுகாடு செல்லும்வரை சாலையின் இருமருங்கிலும் தொடர்ந்தாற்போல் மக்கள் கூடி நின்று தங்கள் இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டனர்.

பலதுறைப் பிரமுகர்களும். பொதுமக்களும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் ஊர்வலத்தில் நடந்து சென்ற காட்சி குறிப்பிடத்தக்கது.

அண்ணா, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் உட்பட ஏராளமான நம் இயக்கத் தோழர்கள் ஊர்வலத்தின் முற்பகுதியில் அணிவகுத்துச் சென்றனர்.

மற்றும் மு. கருணாநிதி, கண்ணதாசன், சி. பி. சிற்றரசு, சத்தியவாணி-முத்து, அம்பில்-தர்மலிங்கம், அலமேலு-அப்பாதுரை, கா. அப்பாதுரை, கே. எம். கண்ணபிரான், போளூர்-சுப்பிரமணியம், செழியன், செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் வகாப், மற்றும் நகரிலுள்ள தி. மு. கழகக் கிளைகளைச் சேர்ந்த அத்தனை பேரும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

வெளி மாவட்டங்களிலிருந்தும் ஏராளமான கழகத் தோழர்களும், பொதுமக்களும் வந்திருந்தனர்.

மற்றக் கட்சிகளின் தலைவர்களும், பிரமுகர்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

சுகாதார அமைச்சர் லூர்து அம்மையார், நகர மேயர் சீனிவாசன் ஆகியோரும் ஊர்வலத்தில் சென்றனர்.

கலைத்துறைப் பிரமுகர்கள், படமுதலாளிகள், ஸ்டுடியோ அதிபர்கள் உட்பட நூற்றுக்கணக்கான நடிக, நடிகையர்கள் ஊர்வலத்தின் முன்னே அணிவகுத்துச் சென்றனர்.

கட்டுக்கடங்காத மக்கள் திரளை ஒழுங்குபடுத்துவதற்கு ஏராளமான போலீஸ் படையும், போலீஸ் குதிரைப் படையும் வந்திருந்தன.

★

முதல் சந்திப்பு!

அந்தக் காலத்தில் பிரபல திரைப்பட டைரக்டராக விளங்கிய இராஜா சாண்டோ, 'வசந்தசேனா' என்ற படத்தைத் தயாரித்தபோது, அதில் என். எஸ். கே. அவர்கள் டி. ஏ. மதுரம் அம்மையாருடன் சேர்ந்து நடிக்கும் வாய்ப்பினைப் பெற்றார்.

அன்றுமுதல், இருவரும் உண்மை வாழ்க்கையிலும் இணைபிரியா தம்பதிகளாயினர்.

★

'கிந்தனார் வண்டி நிலையம்' கண்டார்!

கலைவாணர் அவர்கள், தாம் நடத்தி வெற்றிகண்ட 'கிந்தனார்' கதா காலட்சேபத்தை மனதில் கொண்டு, திருச்சி உறையூரில் 'கிந்தனார் வண்டி நிலையம்' ஒன்றை அமைத்து நகரப் போக்குவரத்திற்கு வசதி செய்து தந்திருக்கிறார்.

★

ரூ. 50,000 செலவில்!

தான் பிறந்த நாகர்கோவிலில், தான் மதித்துப் போற்றியவருள் ஒருவரான உத்தமர் காந்தியாரின் நினைவாக, அரை இலட்சம் ரூபாய்க்குமேல் செலவிட்டு காந்தி ஸ்தூபி ஒன்றினை நிறுவினார், நமது கலைவாணர்!

சோஷலிஸ்டுகள் போராட்டம்

900 பேர் கைது

சென்னைக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர்வைக்க வேண்டும் என்ற முக்கிய நோக்கத்துடன் சோஷலிஸ்டுகள் நடத்திவரும் போராட்டத்தில், 24 பெண்கள் உள்பட 900 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மு. கருணாநிதி இரங்கலுரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கண்ணீரையே காணிக்கையாகத் தருகிறோம்.

"12 ஆண்டுகளுக்குமுன் அவரது வாழ்க்கையிலேயே புயல் வீசியது. அவர் சிறைப்பட நேர்ந்தது. சிறையிலிருந்து அவர் அப்பொழுது விடுதலை பெறுமலிருந்திருப்பாரானால், அனேகமாக அவர் விடுதலைபெறும் நாள் இதுவாகத் தானிருக்கும். அவரது 'விடுதலை' ஊர்வலத்தை இன்று நாம் கண்டிருப்போம். ஆனால், இந்த நேரத்தில் பிணக்கோலத்திலே அவரை ஊர்வலம் வைத்துக் காணும் நிலைமை ஏற்பட்டுவிட்டது.

"கண்ணீரைக் கண்ணீரால் துடைத்துக் கொண்டு, மறைந்தவரின் சேவைகளை நினைத்து, அவரது புகழ் என்றும் நிலைக்கச் செய்யவேண்டுமென நல்ல உள்ளங்களை வேண்டிக்கொள்கிறேன்."

டி. வி. நாராயணசாமி:

'நாட்டைக் காக்க முயன்றவர் வீட்டைக் காக்க மறந்துவிட்டார்'

'அவர் வீட்டைக் காப்பது தமிழ் மக்கள் கடமை'

"சினிமா வானிலே ஒளி விடும் பல நட்சத்திரங்களிடையே ஒரே மதியாக விளங்கியவர் கலைவாணர் என். எஸ். கே. அவர்கள். அத்தகைய முழு மதியை இழந்து இன்று நாம் தவிக்கின்றோம்.

"தன் காலமெல்லாம் நாட்டைக் காத்து வந்தவர் நம் கலைவாணர்; ஆனால் தன் வீட்டைக் காக்க மறந்துவிட்டார். அவர் வீட்டைக் காப்பது தமிழ் மக்களின் கடமையாகும். எத்தனை எத்தனையோ வீடுகளைக் காப்பாற்றியிருக்கிறார் அவர்.

"என் ஆறாவது வயதிலே என் குடும்பம்பட்ட கடனின் விளைவாக, எங்கள் குடும்பம் பல இன்னலுக்குள்ளாயிற்று; நான் வறுமையால் வாடிய நேரத்தில், நம் கலைவாணர் அவர்கள் கொடுத்த பணத்தினால்தான், என் குடும்பம் கடன்களிலிருந்து மீண்டு, இன்றும் வாழ்கிறது.

"இது மட்டுமல்ல; இன்னும் ஆயிரக்கணக்கான ஏழைக் குடும்பங்களை வாழ வைத்திருக்கிறார். ஏழைகளை வாழவைக்கும் நல்லவர்கள் இந்த உலகத்தில் வாழ முடியாதா? இதை நினைக்கும் போது இதயம் வெடிக்கிறது; உள்ளம் வெதும்புகிறது. ஈடு செய்ய முடியாத இந்த நஷ்டத்தை நாம் எப்படித் தாங்குவது? கலைவாணர் என்.எஸ்.கே. புகழ் என்றும் நிலைக்க நாம் நம்மாலானதைச் செய்வோமாக."

எம். ஜி. ராமச்சந்திரன்

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் பேசுவார் என்று அறிவிக்கப்பட்டதும், அவரை இருவர் தூக்கி நிறுத்தினர். பேசமுடியாதபடி துக்கம் தொண்டையை அடைத்தது; 'எங்களுக்கெல்லாம் துணையாக இருந்த அண்ணன் இறந்துவிட்டார்; நான் அழுகிறேன்...' என்று கூறினார்; அதற்குமேல் அவரால் பேசமுடியவில்லை.

எம். ஆர். இராதா

"மறைந்த கலைவாணர் என். எஸ். கே. அவர்கள், பணத்துக்குப் பதிலாக மக்களைச் சேர்த்துக் கொண்டவர். கலைஞன் ஒருவன் எப்படி இருக்க வேண்டுமோ அதற்கு எடுத்துக்காட்டாக அமைந்துவிட்டார்.

"எப்படிப்பட்ட அரசியல்வாதியானாலும், பொதுநலத் தொண்டரானாலும், ஆண்டவன் அவதாரமேயானாலும், அவன் இறந்தால் இவ்வளவு கூட்டம் இங்கு கூடியிருக்குமா?

"கலைவாணருக்காக இங்குகூடியுள்ள கூட்டமே, அவரது சேவைக்கு எடுத்துக்காட்டாகும். கலைஞன் எப்படி நாட்டுக்குச் செயலாற்றவேண்டுமோ அப்படிச் செயலாற்றியவர் என். எஸ். கே.! அவர் புகழ் ஓங்குக!

கே. சாரங்கபாணி

"இன்று நம் வாழ்நாளில் பெரிய துக்க தினமாகும். அவர் எங்களுக்கு மட்டுமல்ல—மனித சமுதாயத்துக்கே சொந்தமாக வாழ்ந்தார். தம் வாழ்க்கையில் கிடைத்த பல இலட்சம் ரூபாய்களை வாரிவாரி வழங்கிய வள்ளல் மறைந்தார். வாழ்க அவர் புகழ்!"

எம். கே. தியாகராசர்

"இன்று நமது கலைச்செல்வம் மறைந்துவிட்டது. ஏழைகளிடம் அன்பு செலுத்தியவர்; தான் சம்பாதித்த செல்வம் பூராவையும் மற்றவர்களுக்கு அர்ப்பணித்ததுடன், தன் வாழ்க்கையையும் பிறருக்கு அளித்தவர் இன்று மறைந்தார்.

'எந்த ஒரு நடிகனுக்கும் இன்று நடப்பதுபோன்ற ஒரு பெரிய மரியாதை கிடைத்ததில்லை. இதுவே அவரது பெருமைக்குச் சான்று.

"அவருடைய நகைச்சுவைக் கருத்துக்களைப்பற்றி மக்கள் வருடக் கணக்கிலே பேசிக்கொண்டிருந்தனர். அவரது நகைச்சுவை படித்தவர்களை மட்டுமின்றி பாமரரையும் மகிழச் செய்தது. அவருக்கு என் இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்!"

மற்றும் பலர்!

மற்றும், எஸ். வி. சகஸ்ரநாமம், சிவாஜி கணேசன், கே. ஏ. தங்கவேலு, கு. சா. கிருஷ்ணமூர்த்தி, ஏ. எஸ். கே. அய்யங்கார், சின்ன அண்ணாமலை, உடுமலை நாராயணக் கவி, புத்தனேரி சுப்பிரமணியம், டி. என். சிவதாணு, ஆகியோர் பேசியபின்பு, இறுதியாக டி. கே. சண்முகம் பேசுகையில், 'கலைவாணருக்கு தகுந்த ஒரு நினைவுச் சின்னம எழுப்புவோம்' என்று உறுதி கூறினார்.

நங்கவரம் அறப்போர்

இதுவரை 24 பேர் கைது

குளித்தலை, செப். 1—

23—8—57-ல், குளித்தலை வட்ட விவசாயிகள் முன்னேற்ற சங்கம் துவங்கிய நங்கவரம் அறப்போர் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தினம் தினம், நூற்றுக்கணக்கான விவசாயிகள், அவரவர், முன்பு வேலைசெய்துவந்த நிலங்களில் இறங்கி ஏர் உழுது உழவடை வேலை செய்துவருகிறார்கள்.

இதுவரை, இரண்டு பெண்கள் உள்பட 24 விவசாயிகளை குளித்தலை போலீசார் கைது செய்து உள்ளார்கள்.

விவசாயிகள் அறப்போரில் ஏராளமான பெண்களும் தீவிரமாக பங்குகொண்டு செயல்படுவது குறிப்பிடத்தக்கது.

50-க்கு மேற்பட்ட விவாயிகள் மீது, இ. பி. கோ. 143, 447 செக்ஷன்மீது குளித்தலை சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் குளித்தலை போலீசார் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

இன்று டி. ஐ. ஜி.—டி. எஸ். பி., டிப்டி சூப்பிரண்டெண்டு, சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப்-கலெக்டர் ஆகியோர்நங்கவரத்தில் முகாம் செய்து, சமரசம் காண முயர்சி எடுத்து வருகிறார்கள். இன்று காலை 11 மணிக்கு, அம்பில் தருமலிங்கம் குளித்தலை முத்துகிருஷ்ணன், சவண்டம்பட்டி-முத்து ஆகியோருடன் அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தினர்; மாலை 4 மணிவரை பேச்சு வார்த்தை நீடித்தது. மீண்டும் 2—9—57காலை சந்திக்க இருக்கிறார்கள்.

அதிகாரிகள் எந்த விதத்திலும் சமாசம் காண பெருமுயற்சி எடுத்துவருகிறார்கள்; ஆனால் மிராசுதார்கள் பிடிவாதமாக இருந்துவருகிறார்கள். இன்னும் இரண்டு தினத்தில் சமரசம் ஏற்படாவிடில் அறப்போராட்டம், நடத்துகிற 'விவசாயிகள் போராட்டத்தின் திட்டத்தை மாற்றி சற்று விருவிருப்பான முறையில் போராட இருக்கிறார்கள். இதுவரை போராட்டம் அமைதியாகவே நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மரியதாசன்—உமயாவதி

திருமணம்

3—9—57 காலை 9 மணியளவில் சென்னை — வண்ணையம்பதி, சிமிட்டரிரோடு, எண் 11 இல்லத்தில், தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில், நே. மரியதாசன்—சி. வி. உமயாவதி திருமணம் நடைபெறும். தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வாழ்த்துரை வழங்குவார். மாலை 6 மணிக்கு ஜான்தைரியம் குழுவினரின் இன்னிசையுண்டு.

அரக்கோணம் வள்ளுவர் மன்றத் திறப்பு விழா

4—9—57 மாலை 6 மணிக்கு தோழர் ஏ. டி. சீனிவாசன் தலைமையில் அரக்கோணம், அம்மனூரில் வள்ளுவர் மன்றத் திறப்பு விழா நடைபெறும். தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ. மன்றத்தைத் துவக்கிவைப்பார். தோழர்கள் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, எம். கே. அம்பிகாபதி மற்றும் பலர் பேசுவர்.

கழகக் கூட்டம்

★

புதியம்புத்தூர்:

சிவன்கோவில் தென்புறமுள்ள வ. உ. சி. திடலில்

4—9—57 மாலை 6½ மணிக்கு

பேசுவோர்:

கி. மனோகரன்

டி. ஆர். சுப்பிரமணியம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.